# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.59/2024

வாதி தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.முத்துக்கிருஷ்ணவேணி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் சபரீஸ்வரன் வா.சா.2

த/பெ.

கிராமம் தொழில்

தாலுகா வயது

---

முதல் விசாரணை 17-03-2026.

நான் விருதுநகர் தாலுகாவில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் பொதுதகவல் அலுவலராக 07.05.2025 முதல் பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் குருசாமி, செல்லம்மாள் ஆகியோர்களின் இறப்புசான்றிதழ்களை சமர்ப்பிக்க சொல்லப்பட்டிருந்தது. மேற்படி ஆவணங்கள் விருதுநகர் தாசில்தார் அலுவலகத்திலிருந்து எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகருக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்பதால் அதனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இயலவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் ஒப்புகை அட்டையில் எங்கள் அலுவலகத்தின் துணை வட்டாட்சியரின் கையெழுத்து போடப்பட்டுள்ளது அந்த ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கடிதம் சிவகாமியம்மாள் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து பணம் கட்ட சொல்லி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு முன்பாக இருந்த தலைமையிடத்து

துணைவட்டாட்சியர் அனுப்பியுள்ளார் அந்த கடிதம் அசல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ரசீதில் சிவகாமியம்மாள் என்பவர் தாசில்தார் விருதுநகர் அவர்களுக்கு ரூ.400 பணம் கட்டியதற்கான இணையதள ரசீது என்றால் சரிதான். அந்த இணையதள ரசீது **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.17 15:44:38 +0530